# தென்னாப்பிரிக்கா (South Africa)

தென்னாப்பிரிக்காவின் **Durban** நகரிலிருந்து வாழ்த்துக்கள். ஆப்பிரிக்கக் கண்டத்தில் மொத்தம் 54 நாடுகள் காணப்படுகின்றன. அவற்றுள் ஒரு நாட்டின் பெயர் தான் **South Africa.**

**South Africa**-வின் மக்களை நான்கு விதமாகப் பிரிக்கின்றனர்: கறுப்பர்கள் **(Blacks) (44 millions**). வெள்ளையர்கள் **(Whites) (5millions),** வெள்ளையர்களும் கருப்பர்களும் கலந்த கலப்பினத்தினர் **(Coloured) (5 millions).** மற்றும் இந்தியர்கள் **(Indians) (1.5 millions).**

வெள்ளையர்கள் இந்த நாட்டை ஆண்ட போது இந்த நான்கு வித மக்களையும் நான்கு விதமாகப் பிரித்து ஒவ்வொரு வித மக்களுக்கும் தனி நகர்ப் புறங்களை **(townships)** உருவாக்கி, அவர்களை ஒருவரோடு ஒருவர் கலக்க விடாமல் ஆட்சி செய்த முறைக்கு பிரிப்பாட்சி முறை **(Apartheid)** என்று பெயர். **Durban** நகரில் வழக்கறிஞராகப் பணியாற்றிய மகாத்மா காந்தியும், இருபத்தாறு (26) வருடங்களாகச் சிறைப்பட்டிருந்த நெல்சன் மன்டேலாவும் **(Nelson Mandela)** இவ்வாட்சி முறையை எதிர்த்துப் போராடியது எம் அனைவருக்கும் நினைவிருக்கலாம். 1994-ஆம் ஆண்டு **Apartheid** முறைக்கு முற்றுப் புள்ளி வைக்கப் பட்டு, நாட்டில் நடை பெற்ற தேர்தலில் நெல்சன் மன்டேலா நாட்டின் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

இன்று உலகில் அடிமைத்தள ஆட்சிகள் மிகவே மறைந்து வருகின்றன. ஆனால், தென்னாப்பிரிக்காவில் கணிசமாகக் கூடி வரும் சனத்தொகையினால் நாட்டின் வளமையை அனைவருக்கும் பிரித்தளிப்பது சிக்கலாகி வருவதாலும், வன்முறைச் செயல்கள் மிகவே தலையெடுப்பதாலும், மீண்டு வரும் அடுத்த தேர்தலின் போது வெள்ளையர் கையிலேயே மீண்டும் ஆட்சியைக் கொடுக்கலாமே என்று கூட சிலர் கதைக்க ஆரம்பித்துள்ளனர். சீனாவைப் போல இங்கும் ஒரு பெண்ணுக்கு ஒரு குழந்தை என்ற முறையைக் கொண்டு வந்து நாட்டின் மக்கள் தொகையைக் கட்டுப் படுத்த வேண்டும் என்று அறிஞர்கள் கூற ஆரம்பிக்கின்றனர்.

இங்கிருக்கும் பதினைந்து இலட்சம் இந்தியர்களைப் பொறுத்த வரையில், இவர்களில் பெரும் பான்மையினர் ஆங்கிலேயர்களால் கி.பி. 1860-ஆம் ஆண்டிலிருந்து 1911-ஆம் ஆண்டு வரை இங்கு பல்வேறு அலுவல்களைப் புரிவதற்காகக் கப்பல்களில் நிறையக் கொண்டு வரப் பட்டவர்கள். இவ்விந்தியர்களில் பெரும் பான்மையினர் தமிழ் நாடு, ஆந்திரா ஆகிய இரு மாகாணங்களிலிருந்து வந்தவர்கள். ஒரு சிலர் கேரளா, வங்காளம் **(Bengal)** ஆகிய இடங்களிலிருந்து இங்கு வந்தவர்கள். ஆனால் அனைவரும் ஒன்றாகக் கலந்து விட்டதால் இவர்கள் தங்கள் தாய் மொழிகளை அறவே இழந்து விட்டார்கள். நாய்டு **(Naidu),** நாயக்கர் **(Naicker),** வேல் முருகன் போன்ற குடும்பப் பெயர்களை வைத்து தங்களின் மூதாதையர் இந்த மாகாணத்திலிருந்து வந்திருக்க வேண்டும் என்று இவர்கள் கணிக்கின்றனர்.

**Durban** நகரில் இந்தியர்களுக்கென்று மூன்று கத்தோலிக்கப் பங்குகள் இருக்கின்றன. இப்பங்குகளில் திருப்பலிகள் அனைத்தும் ஆங்கிலத்தில் தான் நடை பெறுகின்றன. இந்திய மொழி எதிலும் திருவழிபாடு நடைபெறுவது இல்லை. இலங்கையிலிருந்து வந்த குடும்பங்களில் கூட குழந்தைகளுக்குத் தமிழ் மொழி தெரிவதில்லை. ஆனால் ஆலயங்கள் ஞாயிற்றுக் கிழமைகளில் மக்களால் நிறைந்துள்ளன.

வானவில் நாடு என்றழைக்கப் படும் தென்னாப்பிரிக்கா **(Rainbow Country)** தங்கம், வைரம், வன விலங்குகள் நிறைந்த செழிப்பான பூமியாகும். இறைவனின் அழகுக் கொடை என்றும் அக்காலத்தில் அழைக்கப் பட்ட இந்த நாடு பல இனத்து மக்களை தன்னகத்தே ஏற்று புதிய வரலாறு படைக்க முயன்ற ஒரு நாடு.

இன்று பல சவால்களை எதிர் கொள்ள வேண்டிய ஒரு கட்டாயம் இந்நாட்டுக்கு ஏற்பட்டுள்ளது. இது வரையில் நாட்டைச் சிறப்பான முறையில் கட்டி எழுப்பி, உலகின் மிக முன்னேறிய நாடுகளில் ஒன்றாக இதனை மாற்றியுள்ளனர். இது வரை செய்தது பெரிய வெற்றியே. இந்நாட்டிற்காகவும், இம்மக்களுக்காகவும் எம் செபங்களில் ஒரு சிறிய இடமளித்துக் கொள்வோமாக. ஒன்றே குலம். ஒருவனே தேவன்.

கிறிஸ்துவில் அன்புடன்,

**Rev. Fr. Tiburtius Fernandez. SMA**